9th August 1963]

கனம் சபாநாயகர் : சபை அங்கத்தினர்களில் ஒருவர்கூட ஊசி போட்டுக் கொண்டது கிடையாது. (சிரிப்பு).

Kothwal Bazaar

* 65 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether there is any proposal to shift Kothwal Bazaar to a place near Madras Zoo at Peoples Park; and

(b) the steps taken to avert the traffic congestion and insanitation in Kothwal Bazaar?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) பரிசீலனையில் இருக்கிறது.

(இ) கொத்தவால் சாவடிப் பகுதியில் சுகாதாரத்தையும் துப்புரவையும் அபிவிருத்தி செய்யவும் போக்குவரத்தினை முறைப் படுத்தவும் அரசினர் கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தனர்.

(i) துப்புரவுப் பணியாளர் தெருக்களிலிருந்து குப்பை கூளங்களை அகற்றுவதற்காக, ஒவ்வொரு தினமும் காலை 10 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 6 மணி வரையிலும் வண்டிப் போக்குவரத்து முழுவதும் தடை செய்யப்பட வேண்டும்.

(ii) இப் பகுதியிலுள்ள குப்பைகூளங்களை அகற்றுவதற்கென குறைந்தது 5 துப்புரவு லாரிகளாவது ஒவ்வொரு தினமும் அனுப்பப்பட வேண்டும்.

(iii) இப் பகுதியில் மேலும் கக்கூசுகளை ஏற்படுத்த வேண்டும்; கூடுதலாகத் தோட்டிகளையும் நியமிக்க வேண்டும்.

(iv) மார்க்கெட்டின் சுகாதார நிலைமையைப் பார்வையிட முழுநேர சுகாதார இன்ஸ்பெக்டர் ஒருவரையும் அவருக்கு உதவியாகப் பணியாளர்களையும் நியமிக்க வேண்டும்.

(v) கூடுதலாகக் குழாய் வசதிகளை இங்கு ஏற்படுத்த வேண்டும்.

(vi) மார்க்கெட் பகுதியைச் சுற்றிலுமுள்ள தெருக்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

(vii) மிருகக் காட்சிச் சாலைப் பகுதிக்கு இம் மார்க்கெட்டை மாற்றுவது குறித்துப் பரிசீலிக்க வேண்டும்.

இந்தக் கருத்துக்களின் ஒன்றாவது ஐட்டத்தின்படி ஒவ்வொரு தினமும் காலை 10 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 6 மணி வரையிலும் வண்டிப் போக்குவரத்து முழுவதும் தடைசெய்யும்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்ற கருத்துக்களின்பேரில் சென்னை மாநகராட்சி கமிஷனரிடமிருந்து கேட்டுள்ள அறிக்கை வந்து பரிசீலனையில் உள்ளது.

[9th August 1963

திரு. கே. ஏ. மதியழகன் : இவை எல்லாம் சாதாரண நடைமுறை நடவடிக்கைகள் என்றாலும் கொத்தவால் சாவடியைச் சுற்றி இருக்கின்ற கிடங்குகள், பெரிய வர்த்தக நிறுவனங்களையெல்லாம் புறநகராக வெளியே அகற்றிவிட்டால் நன்மை தரும் என்பதை அரசாங்கம் அறியுமா? அந்த முறையில் வெளியே மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : கொத்தவால் சாவடியை அபிவிருத்தி செய்வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களையும் விட்டு விட்டு மிருகக் காட்சிச் சாலை இருக்கும் பகுதிக்கு மாற்றி விட்டால் பிரச்னை ஒரேயடியாகத் தீர்ந்து விடுமல்லவா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது ஏற்கெனவே பரிசீலனையில் இருப்பதாகக் கூறினேன். கார்ப்பரேஷன் கவுன்சில் கூட்டத்திலே கூட, மிருகக் காட்சிச் சாலைக்குப் பக்கத்தில் உள்ள கேசவ பார்க் இருக்கும் 9 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இடத்தை இதற்குச் சிபார்சு செய்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். சர்க்கார் மீண்டும் பரிசீலனை செய்து, பொது ஜன அபிப்பிராயத்தைக் கொண்டு, பின் முடிவு செய்யும்.

கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

*** 66 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் எத்தனை?

(இ) அவைகட்கு சர்க்கார் செய்துள்ள நிதி உதவி, ஆலை வாரியாக எவ்வளவு?

(உ) மத்திய அரசாங்கம் இந்த உதவிகளை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இம்மாநிலத்தில் இதுவரை 11 கூட்டுறவு நூற்பு ஆலைகள் நிறுவ அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. அவற்றுள் 3 ஆலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

(இ) மேற்கூறிய 11 ஆலைகளில் 6 நூற்பாலைகளின் மூலதனத்தில் அரசாங்கம் கீழ்க்கண்டவாறு பங்கெடுத்துக் கொண்டுள்ளது.

	ரூ.
(1) தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை, பேட்டை, திருநெல்வேலி ஜில்லா.	16.78 லட்சம்
(2) ராமநாதபுரம் கூட்டுறவு நூற்பு ஆலை, ஸ்ரீவில்லிபுத்தூர், ராமநாதபுரம் ஜில்லா.	12.00 „